பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 11 செவ்வாய்க்கிழமை 25.04.2023 கதிர் 166

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை கூட்டாக எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் இணக்கம்

## புதிய வரைவொன்றைத் தயாரிக்கவும் ஏற்பாடு

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கூட்டிணைந்து எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகளிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளதோடு பயங்கரவாதத்திற்கு எதிரான புதியவரைவினைஎதிரணியினர் ஒன்றிணைந்துதயாரிப்பதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் அழைப்பில்எதிர்க்கட்சிகளின்பிரதிநிதிகள்பங்கேற்றகூட்டமொன்று நேற்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில்நடைபெற்றிருந்தது. இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச,பொதுச்செயலாளர்ரஞ்சித் மத்தும பண்டார, உள்ளிட்ட பிரதிநிதிகளும், சுதந்திரக்கட்சி சார்பில் தயாசிறி ஜயசேகர உள்ளிட்டவர்களும், சுதந்திர மக்கள் சபை சார்பில் டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ், நாலக்க கொடஹேவா உள்ளிட்டவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் ரவூப்ஹக்கீம், தமிழ்முற்போக்கு கூட்டணி சார்பில் அதன் தலைவர் மனோகணேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மற்றும் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

தற்போது சபையில் (2)

# இது ரகசியம் அல்ல!

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு ரணில் எதிர்பார்த்ததைவிடக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளதை அடுத்து சத்தம் சந்தடியின்றிப்பதுங்கத்தொடங்கியிருக்கிறது இந்த ஆட்சி. ஆனால், அதனை முற்றிலும் பின்வாங்கியது என்று கொள்ள முடியாது.

முன்னதாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்இன்றுநாடாளுமன்றத்தில்முன்வைக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அறிவித்திருந்தார். ஆனால், இன்றைய தின நாடாளுமன்ற நிரலில் அது உள்ளடக்கப்படவில்லை. குறித்த சட்ட மூலம் நாளைய அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலைக் கொண்ட ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்படவில்லை.

பயங்கரவாதஎதிர்ப்புச்சட்டமூலம்கடந்த மாதம் விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஊடாக பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து அந்தச் சட்ட மூலம் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினை விடவும் மோசமானது என்று பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்தச் (2)

# இன்று முழு அடைப்பு வடக்கு கிழக்கு முடங்கும்

## அரச மற்றும் தனியார் சேவைகளும் நிறுத்தம்

**பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் வடக்குக் கிழக்கில் பௌத்த சிங்கள பேரினவாதத்தால் தமிழர் மரபுரிமைகள் அழிக்கப்படுவதைக் கண்டித்தும் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் முழு அடைப்பு இடம்பெறுகின்றது. அரச மற்றும் தனியார் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு கடைகள் அடைக்கப்பட்டு பாடசாலைகள் நிறுத்தப்பட்டு வடக்கு கிழக்கு முழுமையாக முடங்கும் என்று போராட்டத்தின் ஏற்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.**

**7 தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன. பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள், தொழிற் சங்கங்கள், தொழிலாளர் அமைப்புக்கள் என்று அனைத்துத் தரப்புக்களும் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.** (2)

# தனியார் பேருந்துகளும் இன்று ஓடாது

வடக்கு மாகாண தனியார் பேருந்து சங்கமும் இன்றைய முழு அடைப்புக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

வட மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் உப தலைவர் எஸ் டி கே ராஜேஸ்வரன் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

முழு அடைப்புப் போராட்டத்துக்கு வட மாகாண தனியார் போக்குவரத்து சங்கம் ஒத்துழைப்பு வழங்குகிறது. இதற்கமைய வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெற மாட்டாது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாங்களும் முழுமையாக எதிர்க்கின்றோம் .

பயங்கரவாத தடைச் சட்டத்தினால் வட மாகாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் தமிழர்களாகிய நாங்கள் பல இன்னல்களை அனுபவித்திருக்கின்றோம். ஆகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு நாங்கள் எமது எதிர்ப்பினை தெரிவிக்கின்றோம் - என்றார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நிறைவேற்ற முயன்றால் போராட்டம்

## யாழ். பல்கலைக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மாணவர் சமூகத்திற்கும் எதிரானது தொடர்ச்சியாக இதனை நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் முன்வந்தால் வடக்கு கிழக்கு முழுவதும் மாணவர்களின் போராட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ் பல்கலைக் கழகமாணவர்ஒன்றியதலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கேட்போர் கூட்டத்தில் செய்தியாளர்களிடம் அவர் (2)

# சட்டத்தரணிகளும் இன்று புறக்கணிப்பு

யாழ். மாவட்டத்தின் நீதிமன்றங்களில் இன்றுசட்டத்தரணிகள்வழக்காடமாட்டார்கள் என்று அகில இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் யாழ்ப்பாண வலயத் தலைவரும் யாழ். நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான பாலசுப்பிரமணியம் தவபாலன் தெரிவித்தார்

யாழ்ப்பாண வலய சட்டத்தரணிகள் இன்று வடகிழக்கில் இடம்பெறவுள்ள முழு அடைப்புக்கு முழு ஆதரவு தெரிவித்து யாழ் வலயநீதிமன்றங்களில்ஆஜராகமாட்டார்கள் என்றார் அவர்.

வடக்கு கிழக்கில் சிவில் அமைப்புக்கள், தமிழ்கட்சிகள் என பலதரப்பினர் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் உட்பட்ட கோரிக்கைகளை முன்வைத்து நாளைய தினம் முன்னெடுக்கவுள்ள இந்தப் போராட்டத்திற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் யாழ். வலயத்திற்குட்பட்ட ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம், (2)

# படையினர் காணி சுவீகரிப்பதற்கு மக்கள் எதிர்ப்பு



கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் உள்ள சந்திரன் பூங்காவுக்குச் சொந்தமான காணியை இராணுவத்தினர் தமக்குச் சுவீகரிக்கும் நோக்கத்துடன் திங்கட்கிழமை அளவீடு செய்ய முயன்றபோது பொதுமக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

கிளிநொச்சி நகர மையத்தில் அமைந்துள்ள டிப்போ சாந்தி சந்திரன் பூங்காவிற்கு சொந்தமான காணியைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்ள இராணுவத்தினர் நீண்ட நாள்களாக முயற்சி எடுத்து (2)

# தனியார் ஊழியர்கள் எவரும் பணிக்குச் செல்ல வேண்டாம்





வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தனியார் ஊழியர்கள் எவரும் இன்று பணிக்குச் செல்லத் தேவையில்லை என்று வடக்கு மாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்றைய பொது முடக்கம் தொடர்பில் யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில்வடக்கு மாகாண தனியார் வர்த்தக ஊழியர்சங்கத்தின்தலைவர் சாமிநாதன் சிவகுமார் இவ்வாறு தெரிவித்துள்ளார். (02)

# மீனவர்களும் முழு ஆதரவு மீன் சந்தைகள் மூடப்படும்

வடகிழக்கு வாழ் மீனவர்களையும் அவர்களின் ஜனநாயக குரல்வளையினையும் நசுக்குவதற்காக இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பயன்படுத்தபடும் ஆகவே வடகிழக்கு கடற்றொழிலாளர்கள் நாளைய தினம் தமது தொழில்களை புறக்கணித்து சந்தைகளை இடைநிறுத்தி முழு அடைப்புக்கு முழு ஆதரவு வழங்க வேண்டும்எனயாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் முன்னாள்தலைவரும் ஊர்க்வற்துறை கடற்றொழிலாளர் சமாசத்தின்செயலாளருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார் (2)

# நெடுந்தீவுக் கொலைகளுக்கு பயன்படுத்திய கத்தி மீட்பு



நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேகநபர் அணிந்திருந்த சாரம் என்பன கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரை 2 நாள்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று ஞாயிறுக் கிழமை அனுமதியளித்தது. அதையடுத்து சந்தேகநபர் திங்கட்கிழமை அதிகாலை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சந்தேகநபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொலை இடம்பெற்ற வீட்டின் பின்புறமாக உள்ள கிணற்றிலிருந்து கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேகநபர் அணிந்திருந்த சாரம் என்பன யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவில் தலைமை பொலிஸ் அதிகாரி மேனன் தலைமையிலான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்பிரதீப்பின்நெறிப்படுத்தலில் மீட்கப்பட்டுள்ளன

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடில் சனிக்கிழமை 5 வயோதிபர்கள் சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். 100 வயது மூதாட்டி ஒருவரையும் கொலைசெய்ய முயற்சி எடுக்கப்பட்டது எனினும் அவர் காயங்களுடன் தப்பிவிட்டார்.

இந்தக் கொலைகளின் சந்தேகநபர் பின்னர் புங்குடுதீவில் இருந்து கைது செய்யப்பட்டார்.

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிராக

# கிளிநொச்சியில் சனிக்கிழமை ஊடகவியலாளர்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஏப். 25

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிரான ஊடகவியலாளர்களின் போராட்டம் ஏப்ரல் 29 சனிக்கிழமைகிளிநொச்சியில்நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போது இலங்கை அரசு முன்வைத்துள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் சட்டமாக்கப்பட்டால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்கு மிகப்பெரும்ஆபத்து ஏற்படும். ஊடகவியலாளர்கள்தங்களது கடமைகளைச் சுதந்திரமாக மேற்கொள்ளவது என்பது கேள்விக்குள்ளாகும். எனவே, குறித்த சட்டமூலத்துக்கு எதிராகக் கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஏப்ரல் 29 காலை 9 மணிக்குக் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு முன்பாக எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். அதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஊடகஅமைப்புக்களின் ஆதரவையும் கோரிநிற்கின்றோம் - என்றுள்ளது. (02)

# இன்றைய முழு அடைப்புக்கு ஆதரவாய் அணி திரள்வோம்

## சிறிதரன் எம்பி அழைப்பு



வடக்கு, கிழக்கில் இனறு நடைபெறவுள்ளமுழுஅடைப்புப்போராட்டத்திற்குஆதரவாய் அணி சேர்வோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் அழைப்பவிடுத்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கைவிட வேண்டும், வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்படும் சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்னும் கோரிக்கைகளை முன்னிறுத்தி, 7 தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் நாளைய (2)

# வெடுக்குநாறியில் வழிபாடுகளை எந்த அதிகாரியும் தடுக்கக்கூடாது

## வவுனியா நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.24

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதியில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள தடைபோட முடியாது என வவுனியா நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு திங்கட்கிழமை நீதிமன்றதத்தில் விசாரணைக்கு வந்தது. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனும் வவுனியா மாவட்ட சட்டத்திரணிகளில் 15இற்கும் அதிகளவானோரும் ஆயராகினர்.

வெடுக்குநாறி ஆதிலிங்கத்தை மீள நிர்மாணிப்பதற்குஉத்தரவினைபிறப்பிக்குமாறு அடுத்த வழக்கு தினத்தில் விண்ணப்பம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு (2)

காலைக்கதிர் Kalaikkathir

# பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கேட்டு நெடுந்தீவு மக்கள் நேற்று போராட்டம்

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கேட்டு நெடுந்தீவு பிரதேச செயலக முன்றலில் நெடுந்தீவு மக்களினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. பிரதேச செயலரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சனிக்கிழமை இடம்பெற்ற கொடூரக் கொலைகளைத் தொடர்ந்து நெடுந்தீவில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் விழிப்புக்குழு உருவாக்குவதற்குபொலிஸார் நடவடிக்கைகளெடுக்கவேண்டும் என்பன உட்பட மேலும் பல கோரிக்கைகளையும் முன்வைத்து பொதுமக்களால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நெடுந்தீவுக்கு வந்து செல்பவர்களையும் அங்கு தங்கிநிற்பவர்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

## மொட்டுடன் பீரிஸ் எம்.பி. சட்டப் போருக்குத் தயார்

### நேற்றும் விளாசித் தள்ளினார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்சபைக் கூட்டம் சட்டவிரோதமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று மீண்டும் அறிவித்தார்.

அத்துடன், மொட்டுக் கட்சியின் புதிய தவிசாளர் நியமனம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடந்த சனிக்கிழமைநடத்தியபொதுச்சபைக் கூட்டம் சட்டவிரோதமானது என்பதைப் பொறுப்புடன் கூறிக்கொள்கின்றேன். கூட்டத்தில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் செல்லுபடியற்றவையாகும். நீதிமன்றம் ஊடாக இதனை நாம் நிரூபிப்போம்.

கிராமங்களில் மரணச் சங்கக் கூட்டத்தை நடத்துவதற்குக்கூட நடைமுறைகள் உள்ளன - என்றார். (02)

## பீரிஸுக்கு மீண்டும் பதிலடி கொடுத்தது மொட்டுக் கட்சி



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் சட்டப்பூர்வமானது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சட்ட ரீதியானவை என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர்சட்டத்தரணி சாகர காரியவசம்எம்.பி தெரிவித்தார்.

மொட்டுக்கட்சிதலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுச் சபைக் கூட்டம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. கட்சியின் தவிசாளராக இருந்த பீரிஸுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. உரியநடைமுறைகளைப் பின்பற்றியே கூட்டம் நடத்தப்பட்டது. - என்றார்.

மொட்டுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தின் போது புதிய தவிசாளர் நியமிக்கப்பட்டார். இந்த நியமனம் சட்டபூர்வமானது அல்ல என்றுபீரிஸ்சுட்டிக்காட்டியுள்ள நிலையிலுயே மொட்டுக் கட்சி மேற்கண்டவாறு அறிவித்துள்ளது. (02)

### இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்டமூலத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால், சட்டமூலம் தவறாயின் நீதிமன்றம் செல்லுங்கள், அல்லது நாடாளுமன்றத்தில் விவாதித்துத்திருத்தங்களைச் செய்யுங்கள்என்றுவீரவசனம் பேசினார் நீதி அமைச்சர்.

இந்தச் சட்டமூலத்தை மூர்க்கமாக எதிர்ப்பதற்குத் தமிழ்த் தரப்வு முடிவெடுத்ததைத் தொடர்ந்தும் சர்வதேச நாடுகள் பலவும் குறிப்பாக மேற்குலக நாடுகள் சட்டமூலத்தின் தற்போதைய வடிவத்திற்கு ஆதரவு தெரிவிக்காத நிலையிலும் மகாநாயக்கர்கள்கூட இந்தச் சட்டமூலத்திலிருந்து பொருத்தமற்றவற்றைத் திருத்துங்கள்என்றுகூறிவிட்ட நிலையிலும் கொழும்பில் எதிர்க் கட்சிகள் அனைத்தும் இந்த விடயத்தில் ஒரே அணியில் சேர்ந்துள்ள நிலையிலும் சட்டமூலத்தை இன்று நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வந்து பிரச்சினைகளை வளர்க்க வேண்டாம்என்றுஅரசுத்தரப்பு தீர்மானித்துள்ளது. அதனால் எந்தஅறிவிப்புமின்றிமெல்லப் பதுங்கிக் கொண்டுள்ளனர் ஆட்சியாளர்கள்.

அதனால்தான்இன்றைய தினம் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்காக தனது முயற்சியை ஆட்சியாளர்கள் கைவிட்டுவிட்டனர் என்று அர்த்தமல்ல. சில நாட்களிலேயே அவர்கள் இந்தச் சட்டமூலத்தைத் திடீரென நாடாளுமன்றத்தில் முன்வைக்கக்கூடும்.

இதற்கிடையில் இந்தச் சட்டமூலத்தை எதிர்ப்பது தொடர்பில் எதிரணி வரிசையில் இருக்கும் கட்சிகள் அனைத்தும் நேற்றுக் கூடிப்பேசின. இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்கூடக்கலந்து கொண்டார். ஆனால் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் எவரும் கலந்துகொள்ளவில்லை.

வழக்கமாக இதுபோன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளும் எம்.ஏ.சுமந்திரன் வவுனியாவில் இருந்தார். வெடுக்குநாறி ஆலய வழக்கு இருந்ததன் காரணமாக அவர் வவுனியாவில் இருக்க வேண்டியவராக இருந்தார். அதனால் அவர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று காரணம் சொல்லப்பட்டது. அதேநேரம் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும்கூட தெரியப்படுத்தப்பட்டிருந்த போதும் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அண்மைக் காலமாக இத்தகைய கூட்டு எதிரணியில் பங்கேற்பதில் சுமந்திரனும்கூடப் பெரிதாக ஆர்வம் காட்டுவதில்லை. தமிழரின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் எதிர்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாகத் தெரியப்படுத்தி அதனைப் பகிரங்கப்படுத்தவேண்டும், அதன்படிசெயற்படவேண்டும் என்பது சுமந்திரனின் எதிர் பார்ப்பு. ஆனால் வழக்கமான பௌத்த பேரினவாத மனநிலைகொண்ட சிங்களத் தலைவர்களால் அதிலிருந்து வெளியேவர முடியவில்லை. தமிழர்களின் ஆதரவு வேண்டும்என்பதற்காகஎதையாவது சொன்னாலும் அவற்றை நிறைவேற்றும் எண்ணம் எதுவும் அவர்களுக்குக் கிடையாது என்பதால் இனி எதிரணியின்தீர்வுதொடர்பான நிலைப்பாடு பகிரங்கமாக அறிவிக்கப்படும் வரையில் தள்ளியே இருப்பது என்று அவர் தீர்மானித்திருக்கிறார் போலுள்ளது.

சுமந்திரன் எதையாவது செய்தால் அதற்கு எதிரான நிலைப்பாட்டையே எடுக்கவேண்டும் என்பதை வாய்ப்பாட்டாகவே கொண்டுள்ள மற்றைய கட்சிகளும்கூட இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அதற்கான காரணம் என்னவென்று தெரிவயவில்லை. ஒருவேளை இன்றைய போராட்டத்தைக்காரணமாகச் சொல்வார்களாக இருக்கும்.

- இடிமின்னல் -

### பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தினை ஒன்றிணைந்து எதிர்ப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அத்துடன், புதிய வரைவொன்றை எதிர்க்கட்சிகள் இணைந்து தயாரிப்பதற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதோடு எதிர்காலத்திலும்இணைந்துசெயற்படுவது பற்றிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்ததாவது:

நாம், அனைவரும் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து செயற்படுவதாக இருந்தால் பழைய எண்ணங்களிலிருந்து மாறவேண்டியிருக்கும். நாம் அனைவரும் மாறவேண்டும். காரணம் இது மாற்றமடையும் இலங்கை. நாடு என்றவகையில் செயற்படுவதாக இருந்தால் சர்வதேசத்திடமிருந்து விடுபட்டு தனித்துச் செயற்பட முடியாது.

எதிர் அணியில் உள்ள பல கட்சிகள் இன்று (நேற்று) ஒன்றிணைந்து கலந்துரையாடினோம். பயங்காரவாத எதிர்ப்புச்சட்டத்தினைஎதிர்ப்பது என்று தீர்மானித்துள்ளோம். இந்தக்கடும்போக்கான சட்டத்தினை நாம் தோற்கடிப்போம். அதுமட்டுமன்றி நாட்டின் மனிதஉரிமைகள், ஜனநாயக உரிமைகள், உள்ளிட்டவற்றை பாதுகாக்கும் தேசிய சட்டத்தினை உருவாக்குவோம். அல்லது தற்போதைய நிலைமையைத் தொடர்வதா என்பது பற்றி நாம் அனைவரும் இணைந்து கலந்துரையாடுவோம் - என்றார்.

### இன்று முழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியினால் முன் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்படும் என்று நீதி அமைச்சர்விஜயதாசராஜபக்ஷ அறிவித்திருந்த நிலையில், அன்றைய தினத்தில் தமிழ் மக்களின் எதிர்ப்பை காத்திரமாக வெளிப்படுத்தும் வகையில் தமிழ்க் கட்சிகள் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தன.

இன்றையதினம்போக்குவரத்துச்சேவைகள்எவையும் இடம்பெறாது என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கங்கள் அத்தகைய அறிவிப்புக்களை விடுக்காதபோதும், போக்குவரத்தில் ஈடுபட்டால் பேருந்துகள்தாக்கப்படக்கூடும்என்கிற அச்சத்தால்தமதுசேவைகளும் நடப்பதற்குவாய்ப்புகளில்லை என்று இபோச வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆசிரியர் சங்கங்களும் இந்தப் போராட்டத்தை ஆதரிப்பதாகத்தெரிவித்திருப்பதால் பாடசாலைகள் இடம்பெறாது. அரச அலுவலகங்களுக்கு பணியாளர்கள் வருகை தந்தாலும் வழக்கம்போன்று கதவுகளை அடைத்துவிட்டு, பொதுமக்கள் பணிகள் எவற்றிலும் ஈடுபடமாட்டார்கள் என்று தெரிகிறது.

### பயங்கரவாத எதிர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாத தடைச் சட்டம் என்ற வகையில் 44 வருடமாக எங்களுடைய மக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருக்கிறது. இப்போது அதறற்கு மாற்றாக இன்னும் பயங்கரமான ஒரு சட்டம் வருகின்றது .

அந்தச் சட்டம் மூலம் எங்களை அடக்குவதற்கான சட்டமே. ஒரு மனிதன் சுதந்திரமாக ஜனநாயக ரீதியாக தன்னுடைய கருத்தை தெரிவிப்பதற்கான உரிமையை மறுக்கிறது இந்தச்சட்டமூலம். மாணவர் சமூகத்தை பெருமளவில் இச் சட்டம் பாதித்திருக்கிறது. ஜனநாயக ரீதியாக போராடுகின்ற மாணவர்கள் இனி இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள். அந்தவகையிலேஇந்தபுதிதாக உருமாறி வரவிருக்கின்ற இந்த சட்டமூலத்தை நிறுத்த வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவுவழங்ககூடாது. யாழ் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் இந்தச் சட்டமூலத்தை முற்றாக எதிர்கின்றது. தொடர்சியாக இவ் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீதான நகர்வுகள் முன்னெடுக்கப்படுமானால் வடகிழக்கு தழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டம் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும்.

### மீனவர்களும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட மாகாணத்தில் இருக்கின்ற கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகியமாவட்டங்களைசேர்ந்த கடற்றொழிலாளர்கள் மக்கள் விரும்பாத மக்களினுடைய குரல்வளைகளைநசுக்குகின்ற இந்த ஆட்சியினால் கொண்டு வரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்கிறார்கள். ,அந்தச் சட்டம் வடகிழக்கு தமிழர்களை அதிகம் பாதிக்கும்.

எங்களுடையமக்களினுடைய குரல்வளைகளை நசுக்குவதற்காக இலங்கை ஆட்சியாளர்கள்கொண்டுவருகின்ற மக்கள் விரும்பாத பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை கைவிடக்கோரிநடக்கும்முழு அடைப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் கிராமிய அமைப்புக்கள் ஏனைய கடற்றொழிலாளர்கள் அமைப்புகள் அனைத்தும் ஆதரவுக் குரல் கொடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

வடக்குகிழக்குமாகாணங்களில் அரச அதிகாரிகளினாலும் இந்த ஆட்சியினாலும் மீனவர்களினுடைய குரல் வலைகள்நசுக்கப்படுகின்றன. ஆகவே நசுக்கப்படுகின்ற பொழுதே நாங்கள் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டியிருக்கிறது. நசுக்கிய பின்னர் நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்க முடியாது .

ஆகவே எங்களுடைய கடலையும்கடல்வளத்தையும் எங்களுடைய இருப்பையும் பாதுகாப்பதற்காக, இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தை தகர்த்து, எறிய தமிழ் கட்சிகள் ஓரணியில் முன்னெடுத்து இருக்கின்ற முழு அடைப்புப் போராட்டத்திற்கு கடற்றாழிலாளர்கள் அனைவரும் ஒட்டு மொத்த ஆதரவினை வழங்கவேண் டும்.

மேலும் தொழில்களை நிறுத்தி சந்தைகளை நிறுத்தி இந்த போராட்டத்திற்கு ஆதரவினை கொடுக்க வேண்டும். எங்களைக் காப்பதற்காகவே இந்தமுயற்சி எடுக்கப்படுகின்றது. இதற்கு நாங்கள் கடற்தொழில் சமூகமாக எங்களுடைய பூரண ஆதரவினை கிளிநொச்சி முல்லைதீவு மன்னார் யாழ்ப்பாணம் கடற்தொழிலாளர்கள்ஆதரவுவழங்குகின்றோம். - என்றார். (03)

### சட்டத்தரணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் ஆகிய ஐந்து நீதிமன்றங்களிலும் சட்டத்தரணிகள் இன்று வழக்காடமாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### படையினர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருகின்றனர். குறித்த காணி நேற்று இராணுவத்தினரால் அளவீடு செய்யப்பட்டது

இவ்வாறு இராணுவத்தினரால் காணி அளவீடு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. நகரத்தின் முக்கிய தேவைகளுக்கு காணிகள் தேவையாகஇருக்கும்போதும் படையினர்காணியை நீண்ட காலமாக இந்தக் காணியைத் தம் வசம் வைத்தி ருப்பதுடன் இந்த காணியை அளவீடு செய்து சுவீகரிக்கும் நடவடிக்கையில்ஈடுபட்டிருப்பதாகவும் எதிர்ப்பில்ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

### இன்றைய முழு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தினம்மேற்கொள்ளப்படவுள்ள பொது முடக்கம் ஊடான எதிர்ப்புப்போராட்டத்திற்குதமிழ் மக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தமது முழுமையான ஆதரவை வழங்க முன்வர வேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரன்அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: :

தமிழ் மக்கள் தமது இருப்பினைத் தக்கவைப்பதற்காக எல்லாவழிகளிலும் போராடநிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இன்றைய காலச்சூழலில், தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பைமேலும்கேள்விக்கு உட்படுத்தும் வகையில் சிங்கள இனவாத அரசும் அதனுடன் இணைந்த அரச திணைக்களங்களும் திட்டமிட்டுமேற்கொள்ளும்இன,மத ஆக்கிரமிப்புநடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டியது அவசியம்,

எமது மக்கள் தமது நியாயமான எதிர்ப்பைப் பதிவுசெய்வதற்கான கருத்துச் சுதந்திரத்தைக்கூடப் பறிக்கும் சரத்துக்களை உள்ளடக்கியுள்ளபயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்க்க வேண்டியதும் காலத்தின் தேவையாகஉள்ளநிலையில், இவ்விருகோரிக்கைகளையும் பிரதானமாக முன்னிறுத்தி மேற்கொள்ளப்படவுள்ள இப் போராட்டத்திற்கு எனது முழுமையான பூரண ஆதரவை வழங்கும் அதே வேளை, இன, மொழி, பிரதேச வேறுபாடுகளற்று அனைவரும் இதற்கு ஆதரவளிக்க முன்வர வேண்டுமென்றும் பகிரங்கமாகஅழைப்புவிடுக்கிறேன் - என்றுள்ளது.(05)

### வெடுக்குநாறி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விசாரணையில் முன்னிலையாகியபின்னர்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சட்டத்தரணி இவ்வாறு தெரிவித்தார்.

நீண்டகாலமாக பூசை வழிபாடுகள்இடம்பெற்றமைக்கானபுகைப்படஆதாரங்களை பொலிஸாரே நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர். என்னால் முன்வைக்கப்படுகின்ற விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பதற்காக அரச சட்டத்தரணியின் உதவியை பொலிஸார் நாடியுள்ளனர் எனவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கோரினர் எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

அரசமைப்பின் பிரகாரம் மதவழிபாடுஎன்பதுஎவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமை. அதில் மரத்தையோ, கல்லையோ வழிபடலாம் அதற்கு பூரண உரித்துள்ளது. அவ்வாறு வழிபடும் மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காகவும் அதனை வணங்க முடியாது என்று எவரும் கூறமுடியாது.

அவ்வாறு சொல்வதாக இருந்தால் அனுராதபுரத்திலும்சரி பொலன்னவையிலும் சரி எவரும் வழிபட முடியாது எனபது நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதவான்மேற்படி இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளார்.

அதாவது வெடுக்குநாறி பிரதேசத்திலே வழிபாட்டில் ஈடுபட பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்கக்கு கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு இந்த உத்தரவு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது இந்த வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படும் என்றார் சுமந்திரன்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622









# கோவில்களைப் பௌத்த விகாரைகளாக மாற்றுவது பெரும்பான்மையினரின் உத்தி!

## காணாமற்போனோர் உறவுகள் சங்க ராஜ்குமார் தெரிவிப்பு



இந்துக் கோவில்களை புத்தர் கோவில்களாக மாற்றுவது ஓர் உண்மையான சிங்களவரின் உத்தியாகும் எனதமிழர்தாயககாணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

போராட்டபந்தலில்இன்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகசந்திப்பின்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தின் முடிவிலும் தமிழர்கள் பொதுவாக்கெடுப்புடன்கூடிய இறுதி அரசியல் தீர்வுக்கு அழைப்புவிடுக்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளைக் கண்டுபிடிக்கவும். தமிழ் இறையாண்மைக்கும்அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் உதவிக்காகவும் எமது போராட்டத்தின் 2255 ஆவது நாள் இன்று.

குருந்தூர் மலை, வெடுக்குநாரி, கிண்ணியா வெண்ணீரூற்று கிணறு, திருக்கோணேஸ்வரம், காணி அபகரிப்பு, இராணுவ முகாம்களை சுற்றி கொலைகள் போன்ற இடங்களில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தும்இடங்களில்எல்லாம் பொது வாக்கெடுப்பு அல்லது அரசியல்தீர்வுக்குஅமெரிக்கா மற்றும்ஐரோப்பியஒன்றியம் தலையீடு வேண்டும் எனக் கூறுங்கள்.

இதுவே தமிழர்களுக்கு புத்திசாலித்தனமான மற்றும் கிடைக்கக்கூடிய உத்தி. இலங்கையையோ, இந்தியாவையோ தமிழ் எம்.பிக்களையோ நம்ப வேண்டாம்.

சிங்கள அரசு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களுக்கு எத்தனையோ சிறு பிரச்சினைகளை உருவாக்குகிறது, அதனால் சிங்களவர்கள் தமிழர்களை அரசியல் தீர்வுகளில் இருந்து தமிழர்களின் சிந்தனையை திசைதிருப்பும்படி கட்டாயப் படுத்துகிறார்கள்.

நாம் எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரே தீர்வு, சிங்களவர்களின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்கும் நிரந்தர அரசியல் தீர்வாகும். தீர்வு என்பது இறையாண்மையுள்ள தமிழர்களின் வடக்கு கிழக்கு மட்டுமே.

அரசியல் தீர்விற்கான தமதுபிரதானஆர்ப்பாட்டத்தில் இருந்து தமிழர்களை திசை திருப்ப சிங்களவர்கள் முயல்வது நாம் அறிந்ததே.

தற்போதைய ஜனாதிபதி ரணில்ஒருமோசடியானதமிழ் இனவாதி. அவரது சரித்திரம் 1977 இல் தொடங்குகிறது. அவர் தனது மாமா ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு சிறந்த ஆலோசகராக இருந்தார் என்பது பலருக்குத் தெரியாது.

இப்போது சிங்களவர்கள் புத்தர்சிலையின்சிலைகளை எங்கும் நிறுவுகின்றனர். இந்துக் கோவில்களை புத்தர் கோவில்களாக மாற்றுவது ஓர் உண்மையானசிங்களவரின் உத்தியாகும், மேலும் தமிழர்களை அவர்களின் சுதந்திர சிந்தனையிலிருந்து இருந்து தனிமைப்படுத்துவதும் ஆகும்.

தமிழர்களிடையே போதைப்பொருள் கலாச்சாரம், இரவு நேரத்தில் கொள்ளைகள், தமிழ் பொதுமக்கள் படுகொலைகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் அடக்குமுறைகள் அனைத்தும் இந்த தமிழ் விரோத மற்றும் சைவ விரோத செயல்களில் இருந்து சிங்களவர்களை விலக கட்டாயப்படுத்துவதற்கான சிறந்த வழி, சிங்கள நடவடிக்கையை எதிர்க்கும் ஒவ்வொருதமிழர்களும்இறுதி அரசியல் தீர்வுக்கு அதாவது பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

ஒருபொதுவாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க எவருக்கும் வெட்கமாக இருந்தால் (சில தமிழ் எம்.பி.க்களை நாங்கள் அறிவோம்) குறைந்தபட்சம் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அரசியல் தீர்வைக் காண தலையிட வேண்டும்எனஅழையுங்கள்.

தமிழர்களுக்கு இந்தியா எந்த தீர்வையும் காணாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில், இந்திய சிந்தனைக் குழுவின் கூற்றுப்படி, இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பது, இலங்கையை சீனா மற்றும் பாகிஸ்தானை நோக்கி நகர வைக்கிறது எனத் தெரிவித்தார்.

# போக்குவரத்து வசதியின்றி மாணவர்கள் பெரும் சிரமம்

போக்குவரத்து வசதி இன்மை காரணமாக கண்டாவளைப் பிரதேச செயலாளர்பிரிவுக்குஉட்பட்ட கல்லாறுபிரமந்தனாறு மயில் வானபுரம்போன்றஇடங்களில் வாழும் மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்குப் பெரும் சிரமப்பட்டு வருகின்றார்கள்.

தமது நாளாந்த கல்வி நடவடிக்கைகளுக்காக அவர்கள் ஆறு கிலோமீற்றர் அளவில் நடந்து சுண்டைக்குளம் சந்தி சென்றே பேருந்துகளில் ஏறவேண்டிய நிலை இருக்கின்றது. தற்பொழுது கடும் வெயில் காரணமாக மாணவர்கள் மிகவும் சிரமப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர் சில மாற்றுத்திறனாளிமாணவர்களும் இந்தத் தூரத்தை நடந்தே கடக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். எனவே மாணவர்களின் நலன் கருதி ஓர் பேருந்துகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள்கோருகின்றனர். அத்துடன் மேலும் தெரிவிக்கையில்தமதுபகுதியில்காலை மாத்திரமே தனியார் பேருந்து ஒன்று சேவையில் கல்லாறு பகுதியிலிருந்து கிளிநொச்சி



நோக்கி செல்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

# தேசபந்து தென்னகோன் விவகாரம் மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவு

காலிமுகத்திடல்போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை சந்தேக நபராக பெயரிடுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப் படுத்துவதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது.



மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும்ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வே இன்று (திங்கட்கிழமை) இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இரவுக்கான நீதி எதிர்காலத்துக்கான நீதி

அரச ஊடகமான சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் சிங்கள சேவையில் 15 வருடங்களாகப் பணியாற்றிய பெண் ஒருவர் எழுப்பியுள்ள குற்றச்சாட்டுக்கள் மீது போதியளவு கவனம் குவிக்கப்பட்டுள்ளதா என்கிற சந்தேகம் எழுந்துள்ளது. அது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.

தனது பணிக்காலம் முழுவதும் இந்த நிறுவனத்தில் பணியாற்றும் மூத்த அதிகாரிகளால் இரட்டை அர்த்த வசனங்கள் உள்ளிட்ட பல்வேறு பாலியல் ரீதியான துன்புறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்ததால் வேறு வழியின்றி தனது கனவுப் பணியான ஊடகத் துறையிலிருந்து வெளியேறி இருக்கிறார் என்று இரா தேவேந்திர என்கிற பெண் பொது வெளியில் ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சுயாதீன தொலைகாட்சியீல் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குபவராக இரா பணியாற்றி வந்தார். 2008ஆம் ஆண்டு முதல் அவர் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார். கடந்த மாதம் இனியும் பொறுக்க முடியாத என்கிற நிலையில் தனது பணியைவிட்டு கடந்த மாதம் வெளியேறிவிட்டார்.

இராவின் குற்றச்சாட்டுக்களில் மிக முக்கியமானது என்னவென்றால், தனது நிறுவனத்தில் உள்ள மூத்த ஆண்களால் நிகழ்த்தப்படும் பாலியல் சீண்டல்கள், எல்லை மீறல்கள் குறித்து காணொலி மற்றும் ஒலிப் பதிவு ஆதாரங்களைச் சமர்ப்பித்து உயரதிகாரிகளிடம் முறையிட்டபோதும் அது ஒரு பொருட்டாகக்கூடக் கொள்ளப்படவில்லை என்பதுதான்.

இது மிகப் பாரதூரமான ஓர் விடயம். குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் அது குறித்து விசாரணை நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், ஆதாரங்களைச் சமர்ப்பித்த பின்னரும் அத்தகைய ஒரு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது மிக ஆபத்தான நிலை. இந்தப் பிரச்சினை தனக்கு மட்டுமில்லை, அங்கு பணியாற்றும் எல்லாப் பெண்களுமே எதிர்கொள்ளும் துயரம் என்றபோதும் பயம் அல்லது வேலை வேண்டுமே என்கிற நிலை காரணமாக மற்றப் பெண்கள் அது பற்றி வாய் திறக்கப் பயப்படுகின்றார்கள் என்று இரா தெரிவித்துள்ளார்.

உலகம் மீ ூ கலாசாரத்திற்குள் நுழைந்து வெகு காலமாகிவிட்டபோதும் இலங்கையில் அது பற்றிய விழிப்புணர்வு, அதுவும் ஊடகங்களிலேயே – அரச ஊடகங்களிலேயே – எப்படி இருக்கின்றது என்பதற்கான ஆதாரம் இந்தச் சம்பவம். இதுபோன்ற ஒரு கலாசாரம், பெண்களுக்குப் பாதுகாப்ப நிலை ஒருபோதும் அனுமதிக்கப்படவே கூடாது.

உலகமும் நாடும் மிக வேமாக மாறிக்கொண்டுவருகின்றன. பழைய சிந்தனைகளும் பழக்க வழங்கங்களும் எப்போதும் பொருத்தமானதாக இருக்காது. இன்றைய உலகத்திற்கும் இளைஞர்களுக்கும் அவர்களின் சிந்தனைப் போக்கு மற்றும் நடத்தைக்கும் தம்மை இயைபாக்கிக்கொள்வது மூத்தவர்களின் கடமையும் பொறுப்பும்கூட. தாங்கள் வளர்ந்த சூழலைப் போன்றே இப்போது நடந்துகொள்ளலாம் என்று தொடர்வது மூத்தவர்களுக்கு அழகல்ல. அவர்கள் மாறியாகவேண்டும்.

அதற்கான முதல் விதையை இரா போட்டுள்ளார். அது வளர்க்கப்பட்டு பெரு விருட்சமாக்கப்படவேண்டும். அதற்கு அவரது குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு முறையான சுயாதீனமான விசாரணை ஒன்றை நடத்தவேண்டும். அவர் கூறும் குற்றச்சாட்டுக்களில் உண்மை இருப்பின் அதற்குரியவர்கள் தண்டிக்கப்படுவதுடன் அரச நிறுவனங்களில் காணப்படக்கூடிய அத்தகைய சூழல் முற்றிலுமாகக் களைந்தெறியப்பட பொறிமுறை ரீதியான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதும் அவசியம். அதற்கு முதலில் இரவு நீதியை நோக்கி நடக்கவேண்டும். ஆட்சியாளர்கள் அதற்கு உடன் வழியமைக்கவேண்டும்.

# பூரணமான ஒத்துழைப்பை முழு அடைப்புக்கு வழங்குக

## சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை



புதிய பயங்கரவாத சட்டத்துக்குஎதிராகமுழுமையான ஒத்துழைப்பை வழுங்குங்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஹர்த் தாலுக்கு ஆதரவு கோரி வவுனியாவில், துண்டு பிரசுரம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

இன்றைய தினம் வடக்கு - கிழக்கிலே நடைபெற இருக்கின்ற நிர்வாக முடக்கலுக்காக வவுனியாவில் இருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி அரசாங்கம் கொண்டு வருகின்ற புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்படி துண்டுப்பிரசுரம் வழங்குகின்றோம்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எந்த அளவுதூரம் தமிழ் மக்களைப் பாதித்திருக்கிறது, எவ்வளவு தூரம் உயிரிழப்புகள், சொத்தழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாங்கள் அனுபவித்திருக்கின்றோம்.

அதைவிட மிக மோசமான முறையிலே இந்த பயங்கரவாத தடைச் சட்டம் நாடாளுமன்றத்திலே கொண்டு வரப்பட இருக்கின்றது. ஆகவே நாடாளுமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த புதிய பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண் டும்.

அதே போல் இதுவரை காலமும் தமிழ் மக்கள்தான் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனியும் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. அதைவிட இனிவரும் காலத்தில் தெற்கிலே இருக்கக்கூடிய சிங்கள முற்போக்கு சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள், மாணவர்கள் இந்த புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ் மக் கள் இதுவரை காலமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் எந்தளவு தூரம் பாதிக்கப்பட்டார்களோ அதைவிட மோசமான அளவுக்கு தெற்கில் இருக்கக்கூடிய சிங்களவர்களும் பாதிக்கப்பட இருக்கிறபடியால் ஆகவே தமிழ், சிங்கள, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

அதே போல் வடக்கு கிழக்கிலே நடைபெறுகின்ற பௌத்தமயமாக்கல், ஆலயங்கள் இடிப்பது அல்லது பௌத்த சிலைகளை நிறுவுவது போன்ற அனைத்து விடயங்களுக்காகவும், இன்று இந்த பூரணமான கடையடைப்புக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முழுமையானஒத்துழைப்பை, ஆதரவை வழங்க வேண்டும்.

அந்தஅடிப்படையில்தான் இன்றைக்கு நாங்கள் இந்த வவுனியா நகரில் இருக்கக் கூடிய அனைத்து வர்த்தக நிலையங்கள், அனைத்து பொது அமைப்புகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடைய ஆதரவை கோரி இந்தத் துண்டுப்பிரசுரத்தை வழங்கி இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை மாணவர்கள் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

அதிகளவில் வெப்பநிலை நிலவும் நேரமான முற்பகல் 11 மணி முதல் மாலை 3 மணி வரை பொது வெளியில் எந்தவொரு செயற்பாடுகளையும் தவிர்த்துக் கொள்வதற்கு அல்லது குறைத் துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவசங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் வி.ஆரியரத்ன தெரிவித்தார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் இந்தக் காலப்பகுதியில் எந்த வகையான வெளிக்கள செயற்பாடுகளையும் ஏற்பாடு செய்ய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கொழும்பிலுள்ள இலங்கை மருத்துவ சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

குழந்தைகள், சிறுவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் இந்த வெப்பநிலை அதிகரிப்பால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடும். இவ்வாறான பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு தாகம் ஏற்படும் வரை காத்திருக்காது தேவையானளவு நீர் அருந்த வேண்டும். அதாவது 2.5 லீற்றர் நீர் அருந்த வேண்டும்.

எனினும் குளிர் பானங்கள் அருந்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இலகுவான, இளம் நிறத்திலான ஆடைகளை அணிவதால் அதிக வெப்ப நிலையால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும். குறிப்பாக முற்பகல் 11 மணி முதல் மாலை 3 மணி வரை வெளிக்கள செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும். பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் வெளிக்கள செயற்பாடுகளை ஏற்பாடு செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை நாட்டின் பல மாவட்டங்களில் மனிதர்களின் உடல் வெப்பநிலை அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்தில் காணப்படுகிறது. அதற்கமைய வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல் மாகாணங்களிலும் , மொனராகலை , இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் வசிக்கும் மக்கள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு வெப்பநிலை அதியுயர் மட்டத்தில் காணப்படுகின்றமைக்கான காரணம் காற்றின் வேகம் மிகக் குறைவாக உள்ளமையாகும். பெரும்பாலும் மே மாதத்தின் 3ஆம் அல்லது 4ஆம் வாரத்திலேயே இந்நிலைமை மாற்றமடையக் கூடும் என்று குறித்து வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்பு!

நாவுல - மொரகஹகந்த நீர்த்தேக்கத்திலிருந்து இராணுவச் சிப்பாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்த்தேக்கம் மற்றும் மின் நிலையத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கிரலகொல்ல இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சிப்பாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதானவர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீர்த்தேக்கத்தின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 10 இராணுவ சிப்பாய்களில் ஒருவர் காணாமல்போயிருந்தமையால் ஏனையோர் தேடுதல் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன்போது, நீர்த்தேக்கத்தின் அணைக்குகீழே, 300 மீற்றர் ஆழத்தில் நீர் பாயும் பாலத்தின் அடியிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

சம்பவம் தொடர்பில் நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். (02)

# வடக்கில் பனை வளம் அழிப்பு தடுக்க விசேட வேலை திட்டம்




வடக்கு மாகாணத்தில் பனை வளம் அழிக்கப்படுவதை தடுக்க விசேட வேலை திட்டம் ஒன்று பனை அபிவிருத்தி சபையும் தென்னை பயிற்செய்கை சபையும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக தென்னை பயிற்செய்கை சபையின் யாழ் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

யாழில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித அவர் வட மாகாணத்தில் தென்னைசெய்கையும், பனை செய்கையும்கூடுதலான அளவு மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் பனை என்ற வளம் மிக முக்கியமானது வடக்கு மாகாணத்தின் வளங்களாக இரண்டு கண்கள் காணப்படுகின்றன ஒன்று தென்னை மற்றையது பனை. ஆனால் பனை வளம் படிப்படியாக ஓரளவுக்கு குறைந்து கொண்டு செல்கின்றது தென்னை செய்கைவீதம் கூடுதலாக இருக்கின்றது.

பனையினை வெட்டி தென்னை செய்கையை கூடுதலாக செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

எமதுபரிந்துரைக்கிணங்க தென்னை,பனைசெய்கையை ஒன்றாக இணைத்து செய்வதற்குரிய ஆராய்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அதாவது ஒரு புதிய வேலை திட்டம் ஒன்றை நாங்கள் முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

அதற்கான முன்னாயத்த வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன குறிப்பாக தென்னை செய்கையை மேற்கொள்ளாது பனை மரம் அழிப்பதை நிறுத்துவதும் பனைதென்னையை ஒன்றாக இணைத்து வளர்ப்பதை ஊக்குவிப்பதே அதன் நோக்கமாகும். இதற்கான திட்டம் விரைவில் பனை அபிவிருத்தி சபையும், தென்னைபயிர்ச்செய்கை சபையும் இணைந்துகொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. - என்றர்.

# பொலிஸ் உத்தியோகத்தர்மீது நுவரெலியாவில் தாக்குதல்!

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை சமரசம் செய்ய தலையிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கிய சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியா வசந்த கால திடலில் கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய ஒருவர் ஆரம்பத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர் . ஏனைய நான்கு சந்தேகநபர்கள் 23 ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்டுவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குவைத்திலிருந்து நாட்டுக்கு அனுப்பப்பட்ட 52 இலங்கையர்



குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்து அந்நாட்டில் நீண்ட காலமாக வீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்த 52 இலங்கையர்கள்கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவு செய்த பின்னர், குற்றப் புலனாய்வுத்திணைக்களம்மற்றும்குடிவரவுத்திணைக்கள அதிகாரிகளின் தற்காலிக விமான அனுமதியின் கீழ் இந்தக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

இந்தவகையில்குவைத்தில்உள்ளஇலங்கைதூதரகத்தில் பதிவு செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஐந்தாவது குழு இதுவாகும்.

இவர்கள் நேற்று (திங்கட்கிழமை) காலை 06.05 மணியளவில் குவைத்திலிருந்து ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ்விமானமானயூ.எல். - 230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

## கணவனைக் கொல்ல முயற்சி மனைவியும் நால்வரும் கைது

தனது கணவனை கொலை செய்வதற்காக ஒரு லட்சம் ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் மனைவியை ஞாயிற்றுக்கிழமை ஆனமடுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபரான பெண் தனது கணவரின் நெருங்கிய நண்பருடன்தகாத உறவைப் பேணியிருந்தமை பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், பெண்ணுடன் தகாத உறவைவைத்தார்எனகூறப்படும் நண்பர் உட்பட மேலும் நால்வரை ஆனமடுவ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது வாள்வெட்டுக்கு இலக்கான கணவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கொலை முயற்சிக்கு பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கத்திகள் ஆறொன்றிலிருந்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## குற்றச்செயல்களை தடுக்கக்கோரி யாழ். மல்லாகத்தில் போராட்டம்





யாழ்ப்பாணம்மல்லாகம் சந்தியில் கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று (திங்கட்கிழமை) காலை மேற்கொண்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை எதிர்த்தும், குற்றச் செயல்கள் குறித்து பொலிஸார் அக்கறையுடன் செயற்படுவதில்லை என்றும், குற்றச்செயல்கள் அல்லது வேறுபிரச்சினைகள்தொடர்பாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கினாலும் உரிய நேரத்திற்கு அவர்கள் வருவதில்லை எனத் தெரிவித்தும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம்,மல்லாகத்தில் உள்ள காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்துக்கு முன்னால் நடைபெற்றது.

போராட்டத்தின் முடிவில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. குறித்தபொலிஸ்அத்தியட்சகர் நேற்று திங்கட்கிழமையே பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர்போராட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டது. பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் தெருநாய்களால் பயணிகள் அவதி



கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை தெருநாய்கள் சுற்றித் திரிந்ததமை அவதானிக் கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குள் நுழையும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை அந்த நாய்கள் சிரமப்படுத்தும் வகையில்நடந்து கொண்டிருந்தன.

இது தொடர்பாக ஊழியர்களிடம் கேட்டபோது, விமான நிலைய முனைய கட்டடத்தின் நுழைவு வாயில்களுக்கு அருகில் உள்ள விமான நிலைய வளாகத்தில் இந்த நாய்கள் சுற்றித் திரிகின்றனர் எனத் தெரிவித்தனர்.

இந்த நாய்கள் எப்படியாவது விமான நிலைய ஓடுபாதையிலோ அல்லது விமானக் கட்டடத்திலோ நுழைந்தால், கடுமையான விபத்துகள் ஏற்படவாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடங்களில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தெரு நாய்களை சுடுவதற்கு விசேட அதிகாரிகள் (டோக் ஷூட்டர்) நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குருநகர் கடற்கரையில் நேற்று தூய்மைப் பணி







கடல் சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் பூமி தினத்தை முன்னிட்டு குருநகர் கடற்கரை பகுதிகளை சுத்தம் செய்யும் நடவடிக்கை திங்கட்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது.

கடல்சால் சுற்றுச்சூழல் அதிகார சபை மட்டும் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் பொலிஸார் இராணுவம் என்பன இணைந்து குறித்த துப்பரவு செய்யும் நடவடிக்கயில் ஈடுபட்டனர்.

குருநகர் கடற்கரை அன்றிய பகுதிகளில் அதிகளவான குப்பைகள்சேர்ந்துஉள்ளமையால்சூழலுக்குபாதகத்தினை ஏற்படுத்தும் என்பதனை கருத்தில் கொண்டு குறித்த பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டன.

துப்பறிவு செய்யும் பணியில் இராணுவம்பொலிஸார், இராணுவதளபதியாழ்ப்பான மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், மாவட்டச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (03)

## பலாலியில் சிக்கியது 26 கிலோ கஞ்சா



யாழ். பலாலி அன்ரனிபுரம் பகுதியில் 26 கிலோ கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டு உள்ளதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அன்ரனிபுரம் பகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபருக்கு வயது 21 எனவும் அவர் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை மர்மமான படகு ஒன்று கரை ஒதுங்கிய நிலையில் இந்த கஞ்சா கடற்படையின் அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 80 லட்சத்துக்கு அதிகம்எனகணக்கிடப்பட்டுள்ளது.

இந்த கஞ்சா கடத்தலுடன் உடுத்துரைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞனுக்கு இரண்டு பியர்களை வாங்கி கொடுத்துவிட்டு பிரதான கஞ்சா கடத்தல் நபர் இந்த இளைஞனை அழைத்துச் சென்றுள்ளார் என போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞனை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 11 திங்கட்கிழமை 24.04.2023 கதிர் 38

## அம்பாந்தோட்டையில் மீண்டும் நில நடுக்கம்

அம்பாந்தோட்டைக்குஅருகில் இன்று அதிகாலை நில நடுக்கம் ஒன்று பதிவாகியுள் ளது என்று புவியியல்ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இன்று அதிகாலை 12.45 அளவில் இந்த நில அதிர்வு உணர்ப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில்4.4என்றஅளவில் பதிவாகியுள்ளது.

அம்பாந்தோட்டை கடற்கரையிலிருந்து 25.8 கிலோமீற்றர் தொலைவிலுள்ள, கடற்பகுதியில்ஆழமற்றபிரதேசத்தில் இந்த நிலநடுக்கம்ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது குறித்து பொதுமக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று அந்தப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (02)

# முழு அடைப்பு வெற்றியடைய அனைவர் ஆதரவும் வேண்டும்

## கிழக்கிலிருந்து சாணக்கியன் அழைப்பு



(பழுவூரான்)

வடக்கு- கிழக்கில் நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முழு அடைப்புப் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாளையதினம்செவ்வாய்க்கிழமை(25)வடக்கு-கிழக்கில் அனுஷ்டிக்கப்படவுள்ள முழுக் கடையடைப்பு தொடர்பில் செய்தியாளர்களிடம் இன்று அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த 7 கட்சிகளில் பல கட்சிகள் கிழக்கு மாகாணத்தில் இயங்கு நிலையில் இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சிதான் இங்கு இந்தப் போராட்டத்தை முழுமையாக ஒருங்கிணைத்து வருகின்றது.

☞ 2

## பீரிஸ்க்கு சட்டத்தரணியூடாக மொட்டுக் கட்சி விளக்கமளிப்பு

பேராசிரியர் பீரிஸுக்கு சட்டத்தரணிகள் ஊடாக தெளிவுபடுத்தி பதிலளிக்கப்பட்டுள்ளதாக பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் அறிவித்துள்ளர்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேராசிரியர் பீரிஸ், கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் தனது சட்டத்தரணி ஊடாக விளக்கம்கோரி கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்திற்கு நாம் எமது சட்டத்தரணிகள் ஊடாகப்பதிலளித்துள்ளோம். குறிப்பாக, பேராசிரியர் பீரிஸ் தவிசாளராக இருக்கும்போது எவ்வாறு கட்சியின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறுமோ அதுபோன்றுதான் இக்கூட்டமும் நடைபெற்றது. புதிய தெரிவும் அவரைத் தெரிவு செய்தது போன்றே முன்னெடுக்கப்பட்டது.

ஆகவே, புதிய நியமனத்தில் எவ்விதமான தவறுகளும் இல்லை என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அதனை எழுத்து மூலமாக அவருக்கு அனுப்பி வைத்துள்ளோம் –என்றார்.

## முன்னாள் சட்டமா அதிபரை விசாரிக்க இடைக்காலத் தடை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்தது

பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவை அழைப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், வாக்குமூலம் வழங்குவதற்காக, இன்றைய தினம், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. அவருக்கு ஏற்க னவே அனுப்பப்பட்ட அழைப்பாணைக்குச் சமூக மளிக்காத அவர், தனது சட்டத்தரணியை அனுப்பி வைத்து விளக்கமளித்திருந்தார். அதை ஏற்றுக்கொள்ளாத பொலிஸார் அவரை வாக்கு–மூலம் அளிக்க வருமாறு மீண்டும் அழைப்பாணை அனுப்பியிருந்தனர்.

இதனையடுத்து, பொலி–ஸாரின் அழைப்பாணை குறித்து முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், வாக்குமூலம் வழங்குவதற்காக, இன்றைய தினம், பயங்கரவாத விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவுக்கு அறியப்படுத்தியுள்ள நிலையில் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இன்றையதினமும்அவர் விசாரணைக்கு முன்னிலையாகாவிட்டால், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பயங்கரவாத விசாரணைப் பிரிவினால், முன்னாள் சட்டமா அதிபர் லிவேராவுக்கு எழுத்துமூலம் அறியப்படுத்தப்பட்டதாக பொலிஸார் உறுதிப்படுத்தினர்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் பல இடங்களில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள்தொடர்பில் சதித்திட்டம் தீட்டப்பட்டிருந்ததாக தான் ஓய்வுபெறும் நாளில் முன்னாள் சட்டமா அதிபர் கூறியிருந்தார்

விவரம் அறிந்த அதிகாரம் மிக்க ஒருவர் அதனை வெளிப்படுத்து–வதற்கு நடவடிக்கைகள் எடுக்காமை தொடர்பில் அவரை விசாரணைக்கு உட்படுத்துவதற்குநடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார். எனினும், அழைப்பு விடுக்கப்பட்ட கடந்த இரண்டு சந்தர்ப்பங்களி;ல் அவர் முன்னிலையாகாத காரணத்தினால் இன்று அழைப்பாணையின் கடைசி நாளாகவிசாரணைப்பிரிவினர் அறிவித்திருந்தனர்.

## தென்னக்கோனைச் சந்தேக நபராக பெயரிடுவதற்கு இடைக்காலத் தடை



மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை, காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவத்தில் சந்தேகநபராகப் பெயரிடுவதை மற்றும் கைது செய்வதைத்தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை இன்று பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் மே 9 ஆம் திகதி, காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் சம்பவத்தில் தன்னைச் சந்தேகநபராகப் பெயரிடுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திதுக்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்து–வதைத் தடுக்கும் வகையில் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மனுவொன்றில் கோரியிருந்தார்.

இதனைப் பரிசீலித்த நீதியரசர்களான நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ. ஆர்மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதி மன்ற அமர்வு, இந்த இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. (02)

## விடைத்தாள் திருத்தம் தொடர்பில் பல்கலை ஆசிரியர்கள் நாளை முடிவு

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தம் தொடர்பில் நாளையதினம் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்கான கலந்துரையாடல் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட விரிவுரையாளர் சாருதத்த இலங்கசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயர்தரப்பரீட்சைக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணியிலிருந்து விரிவுரையாளர்கள் விலகியிருப்பதற்கான காரணத்தினை உருவாக்கியது ஆட்சியாளர்கள் தான். அதன் பின்னர் நடைபெற்ற சுமூகமான கலந்துரையாடல்களில்முன்னேற்றங்கள் எடுக்கப்பட்டபோதும் அதனை சீர்குலைத்ததும் ஆட்சியாளர்கள்தான்.

ஆகவே, ஆட்சியாளர்கள்தான் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு பொறுப்புக்கூறவேண்டியுள்ளது. ஆகவே உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளை முன்னெடுப்பதற்கான தீர் வினை ஆட்சியாளர்களே வழங்க வேண்டும். அதற்கான உரிய கலந்துரையாடல்களை முன்னெடுக்கவேண்டும்.

நாம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராகவே உள்ளோம். அந்த வகையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின்கூட்டமொன்று நாளையதினம்நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்தில்விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்கநடவடிக்கைகள்தொடர்பில் தீர்க்கமானமுடிவுகள்எடுக்கப்படவுள்ளன – என்றார்.

## பெண் பத்திரிகையாளரின் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை வேண்டும்

### ஆட்சியாளர்களிடம் ஊடகக் கூட்டமைப்பு வலியுறுத்து

அரச தொலைக்காட்சியொன்றின் பெண் ஊடகவியலாளர் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்று ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

அரச தொலைக்காட்சியொன்றில்முன்னர்பணிபுரிந்த பெண் ஊடகவியலாளர் ஒருவர் தான் மேலதிகாரியிடமிருந்து பாலியல் தொந்தரவுகளை எதிர்கொண்டதாகத் தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிதத்துள்ளதாவது:

பெண் ஊடகவியலாளர் தான் எதிர்கொண்ட துன்புறுத்தல்களைப்பகிரங்கமாகதெரிவித்திருப்பதை வரவேற்கின்றோம். காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை அச்சமின்றி வெளிப்படுத்துவதற்கு அவர் முன்வந்துள்ளமை பாராட்டத்தக்கது.


அரசதொலைக்காட்சியில் பணியாற்றியவேளை அவர் எதிர்கொண்ட தொந்தரவுகள் அதற்கு காரணமானவர்கள் குறித்து அதன் தலைவருக்கு தெரியப்படுத்தியதாகவும் ஆதாரங்களை சமர்ப்பித்ததாகவும் ஆனால் பொறுப்பான எவரும்நடவடிக்கைஎடுக்கவில்லை எனவும் பெண் ஊடகவி–யலாளர் தனது முகநூலில் தெரிவித்துள்ளார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

ஆகவே அவர் தனது நன்மதிப்பை கௌரவத்தை காப்பாற்றிக்கொள்வதற்காக அங்கிருந்து விலகத் தீர்மானித்துள்ளார். குறிப்பிட்ட நிறுவனத்தில் பெண்கள் தொந்தரவுகளை தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் சூழல் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது.

குறித்த நிறுவனத்தில் பெண்கள் தொடர்ச்சிய–ாக துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படுகின்றபோதிலும் அவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்கள் அரசியல்பாதுகாப்பைப் பெறுகின்றார்கள். ஆகவே நாட்டின் அரசியல் தலைமை இது குறித்து உத்தியோகபூர்வ விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜாங்க அமைச்சர் டயானாவை சி.ஐ.டியினரே கைதுசெய்யலாம்

### உத்தரவு தேவையில்லை என்றது நிதிமன்றம்



குடிவரவு – குடியகல்வுச் சட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர்டயனாகமகேவைக் கைது செய்வது தொடர்பான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்காது எனக்கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் அறிவித்துள்ளார். இந்த வழக்கில் முன்னதாக, முறைப்பாட்டாளர் சார்பில் முன்னிலையானசட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன மற்றும் உதார முஹந்திரம்கே தலைமையிலான சட்டத்தரணிகள் குழு பிரதிவாதியைக் கைது செய்யுமாறு கோரியது.

போதிய சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் டயானா கமகேவைக் கைது செய்ய முன்வரவில்லை என்று அவர்கள் மன்றுரைத்தனர். எனவே, குற்றவியல்நடைமு–றைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் டயனா கமகேவைக்கைதுசெய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு சட்டத்தரணிகள் முன்னதாக நீதிமன்றில் கோரியிருந்தனர்.

இதையடுத்து இன்று தமது முடிவை அறிவித்த நீதிவான், இராஜாங்கஅமைச்சரை உரிய குற்றங்கள் தொடர்பில் கைது செய்யத் தேவைய–ான நடவடிக்கைகளை மேற்கொள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று கூறினார். எனவே, இது தொடர்பில் தாம் உத்தரவு பிறப்பிப்பது தேவையற்றது என்று நீதவான் தெரிவித்தார். அதன்பின், வழக்கை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்க நீதிவான் உத்தரவிட்டார். (02)

## பொது ஜன பெரமுன யாருடைய தனிப்பட்ட சொத்தும் கிடையாது

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விளாசல்

பொது ஜன பெரமுன கட்சி யாருடைய தனிப்பட்ட சொத்தும் கிடையாது என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனிக்கிழமை நடைபெற்ற பொது ஜன பெரமுனவின் வருடாந்தக் கூட்டம் முழுமையாக சட்ட விரோதமானது. அந்தக்கூட்டத்தில்எடுக்கப்பட்ட அனைத்துத்தீர்மானங்களும் சட்டத்திற்கு முரணானவை. அதனை இலங்கைநீதிமன்றக் கட்டமைப்பின் முன்னாள் நாம் நிரூபிப்போம் என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்.

குறித்த கூட்டத்தின்போது தலைமை ஆசனத்தில்

☞ 2

## நான் பைத்தியக்காரன்தானா? மஹிந்தவிடமே கேளுங்கள்

### பீரிஸ் காட்டம்



நான் பைத்தியக்காரன் என்று தெரிவித்தவர் மஹிந்த ராஜபக் தான் அவரிடத்தில் தான் நீங்கள் மீண்டும் நான் பைத்தியக்காரனா என்று கேள்வி எழுப்பவேண்டுமென பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் காட்டமாகத் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடத்தில், உங்களை மஹிந்த ராஜபக்ஷ பைத்தியக்காரன் என்று கூறியுள்ளாரே என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் தெரிவித்ததாவது:

என்னை அதிசிறந்த வெளிவிவகார அமைச்சர் என்றும், நான் பொது ஜன பெரமுனவின் தவிசாளராக இருப்பது கட்சிக்கு பெரும்சக்தியென்றும் தெரிவித்தவர்தான் மஹிந்த ராஜபக்ஷ .

அவ்வாறானவர்என்னை பைத்தியக்காரன் என்று கூறுகின்றார் என்றால் அது பற்றி அவரிடத்தில்தான் கேள்வி கேட்க வேண்டும். என்னால்அதற்குப்பதிலளிக்க முடியாது. யாரையும் பொது வெளியில் விமர்சிக்கின்ற தவறான பழக்கத்தினை நான் பின்பற்றுவதில்லை –என்றார்.

# தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் சாய்ந்தமருதில்







நூருள் ஹுதா உமர்

சாய்ந்தமருதின் வரலாற்றில் முதல் தடவையாக தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள் சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை பௌசி விளையாட்டு மைதானத் தில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது. பாரம்பரிய புதுவருட விளையாட்டுக்கள் மற்றும் நடன நிகழ்வுகள் என களைகட்டியிருந்த நிகழ்வு, சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுடீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜயந்த ரத்னாயக்க கலந்துகொண்டு வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்ததுடன்; இலங்கையில் தமிழ் சிங்கள புத்தாண்டு மற்றும் ரமழான் விளையாட்டு நிகழ்வுகள்; ஒரே காலப்பகுதியில் ஒரே குடையின் கீழ் இடம்பெறுவது இனங்களுக்கிடையே அன்னியோன்யத்தை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

கௌரவ அதிதிகள் வரிசையில் கல்முனை பொலிஸ் பிரதேச உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல்.வுட்டிக்க மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் ஆகியோர் கலந்து கொண்டதுடன் விடே அதிதியாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பொறியலாளர் ஏ.எல்.எம். பாறூக் கலந்து சிறப்பித்ததுடன் பிரதேச முக்கியஸ்தர்கள் விளையாட்டு வீரர்கள் சிறுவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## முழு அடைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அனைவரும் இந்தப் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

பொருளாதார நெருக்கடி, மாணவர் கல்வியில் பின்தங்கியுள்ள நிலைக்கு மத்தியில் இவ்வாறு செய்யலாமா எனச் சிலர் கேட்கலாம். ஆனால் வரவிருப்பது அதனிலும் பேராபத்து. இன்று எம்முன்னே வரவுள்ள சட்டத்தால் இன்னும் நான்கு தசாப்தங்கள் எமது மக்கள் இன்னல்களை அனுபவிக்க வேண்டியதை முன்கூட்டியே எண்ணியே இத்தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் 1979 ஆம் ஆண்டிலே கொண்டு வரப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. இதனை அகற்றக்கோரி நாட்டுக்குள்ளே போராட்டங்களை நடத்தியிருக்கின்றோம். கடந்த வருடம் நாங்கள் வடக்கு- கிழக்கிலே தொடங்ககி நாடு முழுவதும் இந்தச் சட்டத்திற்கு எதிராகக் கையெழுத்ததுச் சேகரிக்கும் போராட்டம் நடத்தினோம். அதை உலக நாடுகளிலே இருக்கும் ஐ.நா உட்பட பல்வேறு மனித உரிமை அமைப்புக்களுக்கும் அனுப்பியிருந்தோம். அப்படியிருந்தும் அதைவிடப் பயங்கரமான மற்றொரு சட்டத்தை அவர்கள் கொண்டுவரப் பார்க்கிறார்கள்.

இந்நிலையில் நாளைய தினம் கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது நாங்கள் மேற்கொள்ளவுள்ள முழு அடைப்புப் போராட்டத்தையொட்டி நிறுத்தப்படலாம் என்ற செய்தி தற்போது கிடைத்திருக்கிறது. ஆனாலும் இதனை நாளை மறுதினமோ, பிறிதொரு தினத்திலோ அவர்கள் கொண்டு வரலாம்.

நேற்றுக் காலை களுவாஞ்சிகுடி சந்தை, மட்டக்களப்பு சந்தை, கிரான் சந்தை போன்ற பகுதிகளில் இளைஞர்கள், கட்சி உறுப்பினர்கள் வீதி வீதியாகச் சென்று அறிவூட்டல்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தக் ஹர்த்தால் வெற்றியடைய அனைவரும் ஓரணியில் நின்று தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றார்.

## பொதுஜன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்ந்திருந்தவர் மஹிந்த ராஜபக் . அவரிடத்தில் எழுப்பப்பட்ட வினாக்கள் அனைத்துக்குமே அவர் அளித்த பதில் எனக்குத் தெரியாது செயலாளரிடத்தில் கேளுங்கள் என்பதாகும்.

இப்படியாக தலைமை ஆசனத்தில் இருக்கும் ஒருவர் எதுவுமே அறியாது வருடாந்தக்கூட்டமொன்றைநடத்தமுடியுமா? அவ்வாறானால் தீர்மானங்களை எடுப்பது யார்? பொது ஜன பெரமுன யாருடைய தனிப்பட்ட சொத்தும் கிடையாது – என்றார்.

## திருமணத்துக்குத் தயாரான இளம் ஜோடி மீது மோதியது பாரவூர்தி: காதலி இறப்பு

### காதலன் ஆபத்தான நிலையில் உயிருக்குப் போராட்டம்

களுத்துறை – மத்துகம வீதியில் கல் அஸ்ஹேன்பிரதேசத்தில் இருவர்மீது பாரவூர்தி மோதியதில் யுவதி ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று களுத்துறை தெற்குப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் களுத்துறை, வெந்தேசிவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இமாா கருணாதிலக்க என்ற யுவதி எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் நேற்றிரவு களுத்துறையில் இருந்து மத்துகம நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மீன் வாங்குவதற்காக, கல் அஸ்ஹேன சந்தியில் தாம் பயணித்த மோட்டார் சைக்கிளை நிறுத்தினர்.

அதன்போது, களுத்துறையில் இருந்து மத்துகம நோக்கிப் பயணித்த பாரவூர்தியொன்று இருவரையும் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த இருவரும் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது யுவதி உயிரிழந்தார்.

இளைஞர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த இளம் ஜோடியினர் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருந்தனர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் கைது செய்யப்பட்ட பாரவூர்தி சாரதி களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (02)

## விடைத்தாள் திருத்தும் பிரச்சினைக்கு விவாதம் மூலம் தீர்வு காணவேண்டும்

### ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்து

உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு அச்சுறுத்தல்கள் இன்றி கலந்துரையாடல் மூலம் தீர்வுகாண வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயவிடைத்தாள் திருத்தும் பிரச்னைக்கு விவாதம் மூலம் தீர்வு காண வேண்டும் என ஜோசப் ஸ்டாலின் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை, எஸ்.பி.திஸாநாயக்க, கல்வி அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ளும் நோக்கில் கல்வி தொடர்பில் முட்டாள்தனமாக பேசுகிறார் என யல்வெல பன்னசேகர தேரர் தெரிவித்துள்ளார்.



## ஜெர்மனி செல்வோருக்கான இலவச சட்ட உதவி மையம் இன்று திறப்பு

ஜெர்மனிக்குச் செல்லும் மாணவர்கள் , வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிப்போர், சுற்றுலா விசாக்களில் செலவோர் யாழ்ப்பாணத்திலேயே இலவசமான சட்ட உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான மையம் இன்று திநந்துவைக்கப்பட்டது.

ஜெர்மனியில் பல்வேறு பிரச்சினைகளுடன் வருகை தந்த இரண்டு இலட்சம் குடியேறிகளுக்கு சேவைகளை வழங்கிய கோறன் பிளோ சடட நிறுவனமே தனது சேவைகளை யாழ்ப்பாணம் வரை விரிவாக்கியுள்ளது. இந்தச் சட்ட நிறுவனத்தின் கிளையை, தென்னாசியாவின் இரண்டாவது அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே முட்மன் கோறன்பிளோ சட்ட நிறுவனத்தின் சட்டத்தரணி கோறன் பிளோ தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை யாழ் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு போதோ அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எமது ஜெர்மன் சட்ட நிறுவனமானது தென்னாசியாவின் கிளையினை அண்மையில் கொழும்பில் திறந்து வைத்த நிலையில் அதன் தொடர்ச்சியாக வடமாகாணத்துக்கான கிளையினை யாழ்ப்பாணத்தில் திறந்து வைத்துள்ளோம்.




1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சட்ட நிறுவனமானது இலங்கையில் இருந்து வந்த பலரின் குடியேற்றத்துக்கான இலவச ஆலோசனைகளையும் தேவை ஏற்படின் குறைந்த கட்டணத்தில் நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்து வெற்றி கண்டது.

இலங்கையில் இருந்து ஜேர்மனி நாட்டுக்குள் பிரவேசித்தவர்களில் சுமார் 2 இலட்சம் பேரின் வழக்குகளை எமது நிறுவனமே கையாண்டது .எமது நிறுவனத்தின் பணி புரியும் சட்டத்தரணி எம் டி எஸ் இராமச்சந்திரன் இலங்கையைச் சேர்ந்தவர் இங்குள்ளமக்களின்பிரச்சினைகள்தொடர்பில் நன்கு அறிந்தவராக இருப்பது வழக்குகளை இலகுவாக கொண்டுசெல்வதற்கு உதவியாக இருந்தது வருகிறது.

ஆகவேஎமதுசட்டநிறுவனம்யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் ஜெர்மன் நாட்டுக்குள் வருகை தரவுள்ள மாணவர்கள், வேலை வாய்ப்புக்காக விண்ணப்பிப்போர் , சுற்றுலா விசாக்களில் வருகை தருவோர் இலவசமான சட்ட உதவிகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்குக!

## ஜனநாயகத்துக்கான குரல் அமைப்பு வலியுறுத்து

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என இலங்கையில் ஜனநாயகத்துக்கான குரல் என்ற அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியுமே பிரதான விடயங்கள் என இலங்கையில் ஜனநாயகத்துக்கான குரல் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இலங்கைஒருதசாப்தகாலமாகபெருந்துயரங்களை - துன்பங்களை - அனுபவித்துள்ளது எனத் தெரிவித்துள்ள ஜனநாயகத்திற்கான குரல் அமைப்பு, கடந்தகாலத் தவறுகளை சரி செய்து சரியான சட்டமூலத்தை உருவாக்குவது தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடமை எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் என்ற அடிப்படையில் தார்மீக உறுதியுடனும் நேர்மையுடனும்; சரியானதை செய்யுமாறு நாங்கள் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித்துள்ள அந்த அமைப்பு, அரசியல் நேர்மை மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு மரியாதை ஆகியவை சுயநலத்துக்கு எதிராக வெற்றிபெறும் என நாங்கள் நம்புகின்றோம் எனவும் தெரிவித்துள்ளது.

# நெல் உற்பத்தி விவசாயிகளுக்கு உரக்கொள்வனவுக்கு நிதிமானியம்!

## அமைச்சர் அமரவீர தகவல்



நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரத்தைக் கொள்வனவு செய்வதற்கான நிதி மானியம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயிகளின் உற்பத்தி செலவைக் குறைப்பதற்காகவே இந்த நிதி மானியம் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய ஒரு ஹெக்டேயரில் நெற் செய்கையை முன்னெடுக்கும் விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாவும், இரு ஹெக்டேயருக்கு 40 ஆயிரம் ரூபாவும் வழங்குவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய 5 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த நிதி மானியத்தை வழங்குவதற்காக 11 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்குசேதனப் பசளை இலவசமாகவழங்கப்பட்டுள்ளதோடு, யூரியா உர மூடையொன்று 10 ஆயிரம் ரூபாவுக்கும் வழங்கப்படவுள்ளது.

ஏனைய உரங்களின் விலையை 4500 ரூபாவால் குறைப்பது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவி சாவு

## இரத்தினபுரியில் சோகம்

இரத்தினபுரியில் புதிதாக அமைக்கப்பட்ட பலாவெல பொலிஸ் நிலைய பிரிவுக்குட்பட்ட ரம்புக்கந்த தோட்டத்தில் பாடசாலை மாணவியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரியில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் தமிழ்மொழிமூலப் பிரிவில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் கணேசன் ருச்சானி (வயது 15) என்ற மாணவியே, இம்முறை எதிர்வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் தனது வீட்டில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால், தான் வழமையாக இரவில் சென்று தங்கும், அருகில் உள்ள தனது தந்தையின் தங்கையினது வீட்டுக்கு சென்று மாணவி உறங்கியுள்ளார்.

இந்நிலையில், மறுநாள் (21) அதிகாலை மாணவி, தன் பக்கத்தில் நித்திரை கொண்டிருந்த அத்தையை எழுப்பி, தண்ணீர் கேட்டு, அருந்திவிட்டு, மீண்டும் தூங்கியிருக்கிறார்.

அதன் பின்னர், அதிகாலை 5 மணியளவில் அத்தையும் வீட்டாரும் நித்திரை விட்டெழுந்து மாணவியை பார்த்த போது, அவர் வெறுந்தரையில் கிடந்துள்ளார்.

அதனையடுத்து, உடனடியாக மாணவியின் நிலை தொடர்பாக அவரது பெற்றோருக்கு அத்தை வீட்டார் அறிவித்துள்ளனர்.

அதன் பின்னர், மாணவியை இரத்தினபுரி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கு மாணவியை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

மாணவியின் மரணம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, விசாரணைகளைமேற்கொண்ட பொலிஸார் மாணவியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

பின்னர், மாணவியின் இறப்புக்கான காரணத்தை கண்டறிய இரத்தினபுரி நீதிவான் நீதிமன்ற நீதிவான் பிரேத பரிசோதனை செய்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், இரத்தினபுரி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்வதற்கான விசேட வைத்திய நிபுணர் விடுமுறையில் இருப்பதால் இதுவரை பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை எனவும் அதனால் மாணவியின் உடல் உறவினர்களிடம் இன்னும் கையளிக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் அப்பகுதியில் உள்ள பாலமொன்றுக்கு அருகில் மர்மமான முறையில் உயிரிழந்த 24 வயதான இளம் பெண்ணொருவரின் சடலமும் மீட்கப்பட்டிருந்தது.

அப்பிரதேசத்தில் தொடர்ந்து இதுபோன்ற உயிரிழப்புகள் இடம்பெறுவதால், இச்சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு, இதுவரை யாரும் கைதுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தவே தேசிய அரசு அமைக்கும் ஆலோசனை

## நாலக கொடஹேவா சாடல்



அரசாங்கத்திடம்சாதாரணபெரும்பான்மை உள்ளது. ஆகவே, தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டிய தேவை கிடையாது. எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தவே தேசிய அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் சபையின் உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கு எதிராக கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுக்க பொதுஜன பெரமுனவின் பொதுச் சபை கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் யாப்புக்கு அமைய பொதுச் சபை கூட்டம் இடம்பெறவில்லை. எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

பொதுஜன பெரமுன என்பது கட்சி அல்ல் அது ஒரு குடும்ப நிர்வாகம் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டுமானால், தேசிய அரசாங்கத்தில் சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என ஆளும் தரப்பு உறுப்பினர்களில் ஒரு சிலர் குறிப்பிடுகிறார்கள்.

யாருடைய தேவைக்காக தேசிய அரசாங்கம் அமைக்கப்படுகிறது என்ற கேள்வி எம் மத்தியில் காணப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் ஆதரவை பெற்று அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. ஏனெனில், அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை உள்ளது. தேசிய அரசாங்கம் என்று குறிப்பிட்டுக்கொண்டு எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன.

சுதந்திர மக்கள் சபை அல்லது சுதந்திர மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் தேசிய அரசாங்கத்தில் இணையப் போவதில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தேசிய அரசாங்கத்தில் இணைய வேண்டிய தேவை உள்ளது. ஆகவே, சுதந்திர கட்சியினர் ஒருவேளை தேசிய அரசாங்கத்தில் ஒன்றிணையலாம். – என்றார்.

# வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வை மேம்படுத்த அரசு எடுத்த முக்கிய நகர்வு!

வெளிப்படைத்தன்மையை மேம்படுத்த சர்வதேசநாணயநிதியத்தின்நிபந்தனையின் அடிப்படையில் இலத்திரனியல் கொள்வனவு முறையைஉடனடியாகநடைமுறைப்படுத்துமாறு நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அனைத்து அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டசபைகள்மற்றும்அரசநிறுவனங்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மே மாதம் முதலாம் திகதி முதல் 300 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான கொள்முதல் அறிவிப்புகள் இலத்திரனியல் மூலம் அறிவிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

200 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள ஒப்பந்தங்களின் விவரங்கள் வரி அமைச்சால்சேகரிக்கப்பட்டுபரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படும்.

அடுத்த மாதம் முதல் அமைச்சரவை அளவிலான கொள்முதல் குழுக்களின் நியமனம் இந்த அறிவுறுத்தல்களை நிறைவேற்றிய பின்னரே மேற்கொள்ளப்படும் என பொது நிதிப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்காக இலங்கை தனது இ-ஜிபி முறையை பல வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியது.

இருப்பினும் பெரும்பாலான அரச முகவர் நிலையங்கள் இந்த அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

வருவாய் நிர்வாகம் மற்றும் கொள்முதல் போன்ற துறைகளில் டிஜிற்றல் மயமாக்கலை விரிவுபடுத்துவதன் மூலம் ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மூன்று கிராமங்கள் ஒரு சிந்தனை திட்டத்தின் கீழ் அட்டப்பளத்தில் போகர் கல்வியகம் சனியன்று திறப்பு








(வேதசகா)

3 கிராமங்கள் ஒரு சிந்தனை என்ற திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய அட்டப்பள்ளம், திராய்க்கேணி, நிந்தவூர் தமிழ்ப்பிரிவு ஆகிய மூன்று கிராமங்களையும் இணைத்து இலவச கல்வியகம் ஒன்று நேற்றுமுன்தினம் (23) ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

போகர் கல்வியகம் என்று பெயரில் இவ் இலவச கல்வியகம் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. போகர் கல்வியக தலைவரும் ,கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவனுமான எஸ். கிருாந்த் தலைமையில் நடைபெற்ற போகர் கல்வியக திறப்புவிழாவில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அதிபர் எம் சுந்தரராஜன் மற்றும் அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலய அதிபர் எஸ் .ரகுநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும், நட்சத்திர அதிதிகளாக போகர் கல்வியக ஆலோசகர் ரி புவனராஜா ,ஆலய தர்மகர்த்தாக்களான த.கோபாலன், எஸ்.சந்திரன் ,அறநெறி ஆசிரியர் உ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அட்டப்பள்ளத்தின் முதலாவது சட்டபீடமாணவி செல்வி கே.சசிந்தினி தனது அனுபவ பகிர்வை அங்கு மேற்கொண்டார். விழாவில் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போகர் கல்வியகத்திற்கான அனுசரணையை காரைதீவைச் சேர்ந்த அவுஸ்திரேலியா அளவு நிலஅளவையாளர் சிவ புண்ணியம் லோகேஸ்வரன் மற்றும் சிங்கப்பூர் பொறியியலாளர் அ.அருள் ஆகியோர் வழங்கி வருகின்றனர்.

முதற்கட்டமாக மூன்று கிராமங்களை உள்ளடக்கிய தரம் 4 மற்றும் தரம் 10 மாணவர்களுக்கு கருப்பாடங்களில் இலவசமாக மாலைநேர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## எதிர்காலச் சந்ததியைக் கருத்தில்கொண்டு நாளைய போராட்டத்தை ஆதரிப்போம்

ஆட்சியாளர்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற உத்தேசித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை எதிர்த்தும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பௌத்த சிங்கள மேலாதிக்க வாதத்தின் பேரால் தமிழரின் மரபுரிமைகள் மீறப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நாளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 7 தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்துள்ளன.

தமிழர்கள் எத்தனையோ போராட்டங்களை நடத்திவிட்டார்கள். அவற்றால் பெற்றதும் இழந்ததும் பலவுண்டு. இருந்தபோதும் கிடைத்த வெற்றிகள் என்று சொல்லிக் கொள்வதற்குச் சொற்பமே இருக்கின்றன என்கிற நிலையில் இந்தப் போராட்டத்தைத் தமிழர்கள் ஏன் ஆதரிக்க வேண்டும் என்கிற கேள்வி எழுவது நியாயமே!

இரண்டு விடயங்களில் இந்தப் போராட்டம் தமிழர்களுக்கு முக்கியமானது. முதலாவது இலங்கையில் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும், அவர்களுக்கு வரலாற்றில் உள்ள இடத்தை துடைத்தழிக்கும் முயற்சிக்கு எதிராகப் போராடுவதன் மூலமே எதிர்காலத்தில் இந்த நாட்டில் தமிழர்கள் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

பௌத்த சிங்கள பேரினவாதம், இந்த நாட்டில் தமிழர்களின் வரலாற்றை மழுங்கடித்து, வரலாற்றுப் பக்கங்களில் இருந்து அகற்றி அவற்றையெல்லாம் பௌத்த சிங்கள வரலாற்றால் நிரப்புவதற்கே பெரும் முயற்சி செய்கின்றது. அதற்கு வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு இருக்கும் நிலத் தொடர்ச்சியை இல்லாமலாக்கி தமிழர்களின் தாயகம் என்று அதனைச் சொல்லமுடியாத நிலையை ஏற்படுத்துவது அதன் திட்டம். அதனால்தான் எல்லைக் காடுகளில்கூட பௌத்தத்தை நிலைநிறுத்தி தமிழர் தாயகத் தொடர்ச்சியை அதன் வழி துண்டாட முனைகின்றது.

பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு ஏவல் சேவகம் செய்யும் கொழும்பின் ஆட்சியாளர்கள் இதனைக் கட்டுப்படுத்தும் வல்லமையற்றவர்கள். அதனால் தமிழர்களே அதற்கெதிராகப் போராடியாக வேண்டும் என்பது கட்டாயம்.

இரண்டாவது விடயம், பௌத்த சிங்கள பேரினவாதம் தனது நோக்கத்தை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கான கருவியே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். அந்தக் கருவியைக் கொண்டு தமிழர்களின் எதிர்ப்புக்களை அடக்கி ஒடுக்கி தனது தேவையை நிறைவேற்றிக்கொள்வதில் பேரினவாதம் கண்ணும் கருத்துமாக இருக்கும். ஆட்சியாளர்கள் அதற்குத் துணை நிற்பார்கள்.

எதிர்காலத்தில் தனது தமிழ்ச் சந்ததி இந்த மண்ணில் சொந்தக் குடிகளுக்குரிய சம மதிப்போடு வாழ வேண்டும் என்று விரும்புகின்ற ஒவ்வொருவரும் இந்தப் போராட்டத்தை ஆதரிகக்க வேண்டிய கடப்பாடு கொண்டவர்கள். இது வெறுமனே கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கான போராட்டம் அல்ல, அதையும் தாண்டி இலங்கையை இயக்கும் ஆன்மாவுக்கு எதிரான போராட்டம். நாமும் நமது சந்ததியும் இந்த மண்ணில் குறைந்தபட்சம் சுயமரியாதையுடன் வாழ்வதற்கென்றாலும் நாளைய எதிர்ப்பு மிக முக்கியமானது. ஒவ்வொருவரும் தவறாமல் அந்த வரலாற்றுக் கடமையை ஆற்றவேண்டும்.

# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கான திட்டம் எதுவுமில்லை என குற்றச்சாட்டு!

உள்ளூர் கடனை மறுசீரமைக்க அரசாங்கம் தயாராக இருந்தாலும், அதற்கான சரியான வேலைத்திட்டம் இல்லை என பேராசிரியர் குற்றம் சாட்டியுள்ளார்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இதுவரை எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர்வசந்தஅத்துகோரள தெரிவித்தார்.

மேலும், உள்ளூர் கடன் மறுசீரமைப்புதொடர்பில்முதலில் தேவைப்படுவது முறையான நடைமுறை ஆய்வை மேற்கொள்வதே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அருண் சித்தார்த் உள்ளிட்ட 5 பேருக்கு விளக்கமறியல்



அருண் சித்தார்த் உள்ளிட்ட 5 பேர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரின் அரைச் சொகுசு விடுதி மீது ஏப்ரல் 20 இரவு அருண் சித்தார்த் தலைமையில் பெண்கள் அடங்கிய 7 பேர் கொண்ட வன்முறை கும்பல் தாக்குதல் மேற்கொண்டதாக விடுதி உரிமையாளர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் அருண் சித்தார்த், அவரது மனைவி உள்ளிட்ட ஆறு பேரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 06 பேரையும் விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களில் ஒருவருக்கு கடுமையான எச்சரிக்கையுடன் பிணை வழங்கப்பட்டது.

ஏனைய ஐவரையும் மே 02 வரையில் விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது

# டிப்பர் வாகனத்தை சட்டத்துக்குப் புறம்பாக பறித்த லீசிங் நிறுவனப் பணியாளர் கைது!

லீசிங் நிலுவைப் பணம் செலுத்தவில்லை என்று தெரிவித்து தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தி டிப்பர் வாகனத்தை பறிமுதல் செய்த நிதி நிறுவனத்தின் பணியாளர் ஒருவரைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தேடப்படுகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நிதி நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு (லீசிங்கில்) டிப்பர் வாகனம் எடுத்துள்ளார்.

அவரது வாகனம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் கோப்பாய் வீதி சமிஞ்ஞை விளக்கில் தரித்து நின்ற போது அங்கு வந்த நால்வர் தம்மை பொலிஸார் எனக் கூறி லீசிங் தவணைப் பணம் செலுத்தவில்லை என பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாகனத்தை லீசிங்கில் கொள்வனவு செய்தவரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தனது வாகனத்துக்குள் அலைபேசி ஒன்று, 50 ஆயிரம் ரூபா பணம் என்பன இருந்ததாக முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர்.

மேலும் மூவரை தேடிவருகின்றனர் எனப் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட மீது சட்டத்துக்கு புறம்பாக வாகனத்தைபறிமுதல்செய்தமை, வாகனத்துக்குள் இருந்த பணம், அலைபேசியை கொள்ளையிட்டமை மற்றும் பொலிஸார் என மோசடியாக தம்மை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

# நுவர – ராகலை இடையே புதிய ரயில் பாதை

## அமைச்சர் பந்துல உத்தரவாதம்



நானுஓயா ரயில் நிலையத்திலிருந்து நுவரெலியா மற்றும் ராகலை வரை பயணிக்கக்கூடிய புதிய ரயில் பாதை வெகுவிரைவில் நிர்மாணிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நுவரெலியா, நானுஓயா பகுதிக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்டிருந்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

'நுவரெலியா நகருக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் ரயில் சேவை தேவையாக உள்ளது. எனவே, மத்திய மாகாண ஆளுநர் காலத்தில் செயற்பட்ட நுவரெலியா – கந்தபளை ரயில் நிலையத்துக்கு இடையில் ரயில் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக புதிய ரயில் பாதையும் நிர்மாணிக்கப்படும்.

நுவரெலியாவில் இருந்து கொழும்பு வரை மரக்கறிகளை கொண்டு வருவதற்கு நானுஓயா ரயில் நிலையத்தை மையப்படுத்தி பொருளாதார மத்திய நிலைய பிரிவொன்று அமைக்கப்படும்' என அமைச்சர் குறிப்பிட்டார். அதேவேளை, நானுஓயா ரயில் நிலையத்துக்கு வருகை தந்திருந்த அமைச்சர், நானு ஓயா ரயில் நிலையத்தில் இருந்து எல்லவரை செல்வதற்கு காத்திருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் கலந்துரையாடினார்.

# நாட்டின் பல மாகாணங்களில் ஓரளவு பலத்த மழை பெய்யும்



கிழக்கு,ஊவா,வடக்கு,வடமத்திய, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சில இடங்களில் 50 மி.மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும், மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும்வீசக் கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## சுற்றுலாத்துறைப் பாதுகாப்பு குறித்து விசேட கலந்தாய்வு

சுற்றுலாத்துறை ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையில் பாதுகாப்பு துறைசார் உயர் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இனிவரும் காலங்களில் சுற்றுலாத்துறை மேம்பாட்டுடன் சுற்றுலா ஹோட்டல்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கான தீர்வுகளை வழங்குமாறும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் சாகல ரத்நாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகக் கையொப்பங்கள் திரட்டல்

தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிரான கையொப்பம் திரட்டும் நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம் காலையில் கிளிநொச்சி சேவைச்சந்தை பிரதான வாயிலில் இடம்பெற்றதுஃ கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் மக்கள் பலரும் கலந்து கொண்டு கையொப்பமிட்டனர்.

மேற்படி கையொப்ப பிரதிகளானவை, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

